உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ குரவே நம

4118

நவாலி

அட்டகிரிக் கந்தர்பதிகம்.

இஃது

நவாலி

க. சோமசுந்தர உபாத்தியாயரால்

இயற்றப்பட்டு,

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

சௌமிய௵ கார்த்திகை௴

1909.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

4118.
VI. பதி. 3

உ
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீ குரவே நம.
நவாலி

அட்டகிரிக் கந்தர் பதிகம்.

காப்பு.

விநாயகர்.

வெண்பா.

ஞானத் திறனறிந்தோர் நாடுமெழி லட்டகிரித்
தானத்தன் மீதுதமிழ் பாட—வானத்துச்
சஞ்சரிக்குந் திங்கட் சடையோ னளித்தமுதற்
குஞ்சரத்தை நெஞ்சே குறி.

வாணி.

வெள்ளைக் கமல மலர்மீதுங் கவிவாண
ருள்ளக் கமலத்து மொத்திருக்கும்—வெள்ளைக்
கலையாளை ஞானக் கலைதேடிக் காணு
நிலையாளை நெஞ்சே நினை.

நூல்.

ஆசிரிய விருத்தம்.

திருமேவு செந்தாம ரைக்காடு பூத்தன்ன
செவ்விதிக ழாறுமுகமும்
திருவருள் சுரந்தொழுகு மீராறு விழிகளுந்
தெண்டரள முறுவலழகும்

MAHAMAHOPADHYAYA

உருமேவு செம்பொன்முடி யோராறு மிரவிபுரை
யொளிமேவு குழைநிரைகளும்
ஒன்னலர் நடுங்கிடும் பன்னிருபு யாசலமு
மொண்கடப் பந்தெரியல்சூழ்
மருமேவு மார்புமெஞ் ஞானவா தித்தனுய்
வலமேவு வடிவேலுமம்
மங்கைமார் வடிவமும் பேரன்ப ருள்ளமாம்
வாவிமலர் சரணமலரும்
கருமேவு மயிலுநான் கண்டுகளி கொள்வதெக்
காலமோ வட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (க)

பாருக்கு ளேகலி யுகத்திலே நினைவிடப்
பரமகா ருண்யரில்லைப்
படிறன்று பழமறைக ளனுதினம் முறையிடும்
பத்தர்களு மிதுசொற்றனர்
சீருக்கு மழியாத திருவுக்கு நற்கல்வி
தேசுக்கு முனதுபாதச்
செந்தாம ரைக்கணே பத்திவைத் தவைபெற்ற
சீரியர்க ளின்றுமுண்டு
ஆருக்கு மருள்செய்வை யெளியனேன் மட்டிலோ
வருளின்றி நீயிருந்தால்
அதுதரும மாகுமோ பொல்லாத பாவியே
னுகிலுந் தள்ளமுறையோ
காருக்கு நிகரென்ன வரமருளு மீராறு
கையனே யட்ட கிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (உ)

மன்னுமெவ் வுயிருக்கு மன்னைநீ தந்தைநீ
மற்றுநீ யென்றுமுன்னோர்
வாய்மலர்ந் தருளினு ரதுநம்பி யுன்னுடைய
மலரடி பிடித்துநாயேன்
துன்னுமென் னோய்மிடி தொலைத்தருள்வை யென்று
தொழுதழுது கேட்டுநின்ருல் [னைத்
சூரசங் காரவை வேலசிங் காரனே
துவரிதழ்க் கமலவாய்விண்
டென்னென்று கேட்கிலா யாரென்று நோக்கிலா
யீதென்ன வெகுமாயமோ
எல்லாரு முன்மக்க ளாகயா னொருவனே
வேதிலார் மகனுயினேன்
கன்னலுந் தேனுங் கலந்தசுவை முத்தமிழ்க்
கடலைநட லட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (௩)

அன்னைதன் னுதரம்விட் டிப்புவி யடைந்தநா
ளன்றுதொட் டின்றுவரையு
மடியனேன் பிணியினுல் மிடியினு லெய்துபே
ரவதியெல் லாமெடுத்துப்
பன்னவென் ருற்பெரிய பாரதக் கதையினும்
பன்மடங் கதிகமாமே
பரிவோடு கேட்கவுன் னீராறு செவிகளும்
பற்ருவெ னக்குறித்தோ
என்னைப் பராமுகஞ் செய்திருந் தாயெனக்
கினிவேறு துணையுமுண்டோ
ஈன்றதாய் கோபித் தடித்திடிற் பிள்ளைபோய்
யாரிடத் தாறுமையா

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY ...ANMIYUR, MADRAS-

கன்னற்சி லேச்சித்த சன்கருது மைத்துனு
கருணைமிகு மட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (ச)

என்றுநீ யுண்டன் றுயிர்த்தொகைக ளுண்டென்று
மிவைமாசடைந் தமையினுல்
இருண்மாசு நீக்கநீ கருணைகொண் டைந்தொழி
லியற்றியா னந்தவெள்ள
மொன்றவைப் பாயென்று முயிரினுக் குயிராகி
யுயிர்கள்வேண் டியனவெல்லா
மொன்றும் விடாதியு மொருவள்ள லென்றுமறை
யோயாது பறையடிக்கும்
அன்றுள்ள வுயிர்தம்மி ளுனெருவ னல்லனே
வயலார் புதுப்படைப்போ
அடியேனை மட்டும்பு றக்கணித் திடுவையே
லருமறைகள் பொய்ப்படாவோ
கன்றும்ம னக்கவலை களைவா யெனக்குரிய
களைகணே யட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (ரு)

எங்கும்வி யாபியா யான்மாக்கள் கேட்கின்ற
வெல்லாம றிந்துவைத்தே
இவர்நேச ரிவர்பகைவ ரென்னுது யாருக்கு
மின்னருளை யுதவுமெந்தாய்
இங்கெனது முறையீட்டி லொன்ருவ துன்செவியி
லேறவிலை யோவேறியு
மிரங்கா திருத்தியே லிந்தவநி யாயத்தை
யாருக்கெ டுத்துரைப்பேன்

பொங்குநின் பூரணவி யாபகத் தினினுன்
புறம்போ புறம்பாக்கவோர்
புதுவிதியு முண்டோசொ லடியனே னுன்னுடைய
பொன்னடிக் கபயமபயம்
கங்கைசிறு வாகுமர சிங்கமுரு காவெனது
கவலையொழி யட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (௬)

சீர்க்குமர மூர்த்தியே யானந்த வெள்ளமே
சிந்தாம ணிக்குவியலே
தேனேதி னத்தின வுவட்டாத வமுதமே
செகமெலாஞ் சென்றுசென்று
பார்க்கின்ற விழிபன்னி ரண்டிலென் பாடெலாம்
பார்க்கவொரு விழியில்லையோ
பாருளோர் முறையிடு கேட்கின்ற செவிகளுட்
பாவியேன் முறையிடுகே
ளோர்க்கின்ற தற்கொர்செவி யில்லையோ யாரையு
மெடுத்தருள் கரங்கடம்மி
லெளியேனை யோர்க்கவொரு கரமில்லை யோவவைக
ளெந்தனுக் குரிமையிலையோ
கார்க்கண்ட னெற்றிவிழி யாற்றந்த சண்முகா
கவலையொழி யட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (௭)

என்னநீ சொல்லினுமு னக்கருள்வ தில்லையென்
றிறுமாந்து நீயிருந்தா
லெளியனேன் விடுவனோ வுயிர்கட்கெ லாமுதுசொ
மாமுன்ற னின்னருளிலே

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS

யென்னுடைய பங்கினை யெனக்கீய்ந் திடாயென்னி
லென்னுணை யிவ்வழக்கில்
வீரேழு லோகமுந் தெரியும்ப டிக்காடி
யென்பங்கு வென்றுசொல்வேன்
நன்னயம் பேசியோர் காசியெ னக்கொடார்
நாலிரண் டறைகதுப்பில்
நாட்டினு வீகுவா ருலகத்தி யற்கையிது
நானுன்வ யிற்கண்டனன்
கன்னயத் தோளசுர னுக்கருள்வை யடியர்பாற்
கருணையிலை யட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (அ)

சந்தத்த மிழ்ப்பொதிய மலையினுறை கும்பமுனி
தன்பாட லுன்பாடலோ
சங்கத்த மிழ்ச்சலதி மொண்டுண்ட கீரன்மொழி
தகுபாட லுன்பாடலோ
பந்தத்தி ருக்கொடிய வேதிருப் புகழ்சொன்ன
வன்பாட லுன்பாடலோ
பருகுசுவை யொழுகுகந் தப்புரா ணஞ்சொன்ன
பாவலன் றன்பாடலோ
உந்தன்வெ றும்மொழிக் கருளில்லை யென்பையே
லுயர்கல்வி யில்லாதவர்க்
குன்னருளு மில்லையோ வவர்தமக் குப்புதிய
தொருதெய்வம் வேறுமுண்டோ
கந்தனுக் குங்கரி முகற்கிளைய சண்முகா
கவலையொழி யட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (க)

சீராரு மமராவ திக்கிறைவ னரியோடு
திருவாணி யுறைநாவினன்
தேவேயு னக்கபய மபயமென வசுர்கொன்று
திருவருள் கொடுத்த திலையோ
போராடி யெதிர்நின்ற சூரபன் மாவெனும்
பொல்லாத பாவியுய்யப்
பொன்னடி பரிக்குமருள் தரவில்லை யோபுகழ்ப்
புலவனுக் கருளவிலையோ
நீராடி நியமஞ்செய் கீரனை யடைத்திட்ட
நீள்பூத மாவியுண்ண
நீயருள வில்லையோ வென்னுடைய வல்லல்தா
னீக்குதற் கரிதானதோ
காராரு முன்கடைக் கண்ணுக் கிலக்கதோ
கவலையொழி யட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு நொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (௧௦)

விண்ணேவிண் ணூடுவெங் கதிரேதண் மதியமே
வீசுவளி யேகனலியே
மேலான வாரியே பொறைமிக்க பூமியே
வீயாத வுயிரேயெனு அ
வெண்ணேர்ந்த விருநான்கு மூர்த்தமாய் நிற்பையெனி
லெளியேனி னீயில்லையோ
இருந்தாலெ னல்லகண் டங்கண்டு னருள்செய்த
லியலாத வொருகருமமோ
அண்ணைய நாதிதொட் டழியாத தந்தையே
யன்னையே யுன்னையன்றி
யடியேனி னித்தஞ்ச மாரையடை வேனெந்த
னரியவினை யாவு நீக்கி

கண்ணேயெ னக்குனிரு கஞ்சவஞ் சரணங்கள்
கட்டளைசெ யட்டகிரிவாழ்
கருதடிய ரிருவினையு மிடிபிணியு மொடியிலழி
கந்தசுவா மிக்கடவுளே. (கக)

வாழி.

கலித்துறை.

வேல்வாழி வெற்றி மயில்வாழி யன்பர் வினைகெடுக்குங்
கால்வாழி பன்னிரு கைவாழி வாழி கருணைமுகம்
சேல்வாழு நாட்டத் தியானையும் வள்ளியும் வாழிசெப்பு
நூல்வாழி வாழி செவ்வே ளட்டமாகிரி நூறகமே.

முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சுப்பிரமணியதேசிகன் திருவடிவாழ்க.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY